- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

01. தன்மரபைப் புகழ்பெறச் செய்தல் என்ற பொருள் தரும் மரபுத் தொடர்
    1. அடிபிறக்கிடல் 2. அளவிளக்குதல் 3. அடிபிடித்தல் 4. அடிநகர்தல்

02. ‘காதைக் கடித்தல்’ என்ற மரபுத் தொடர் தரும் பொருள்
    1. ஏமாற்றுதல் 2. செய்தி பரப்புதல் 3. கோள் மூட்டுதல் 4. இரகசியம் சொல்லுதல்

03. எக்காரியத்தையும் செய்யுமுன்னர் அதனை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும் என்ற பொருள் தரும் பழமொழி
    1. ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம் 2. ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு
    3. ஆழமறியாது காலை விடாதே 4. பதறாத காரியம் சிதறாது

04. ‘ஆணைக்கும் அடிசறுக்கும்’ என்ற பழமொழியின் கருத்து
    1. ஆனையும் வழுக்கி விழும் 2. ஆனை விழுந்தால் ஆயிரம் பொன்
    3. பெரியோரும் சிறியவராகலாம் 4. பெரியோரும தவறு செய்யலாம்

05. ஒருவர் செய்த உதவியை மறந்து அவருக்கே, தீற்கு விளைவிப்பதைக் குறிக்கும் உவமைத் தொடர்
    1. ஏவற்பேய் கூரையைப் பிடுங்கியது போ 2. வளர்த்த கடா மார்பிற் பாய்ந்தது போல
    3. பசுத்தோல் போர்த்த புலி போல 4. கனியிருக்கக் காய் கவர்ந்தது போல

பகுதி 2

பின்வரும் பாடலைப்படித்து அதன் கீழ் தரப்படுகின்ற வினாக்களுக்கு விடை எழுதுக

1. பதியிழந்தனம் பாலனை இழந்தனம் படைத்த
   நிதியிழந்தனம் இனிநமக் குளதென நினைக்குங்
   கதியிழக்கினுங் கட்டுரையிழக்கிலோ மென்றான்
   மதியிழந்து வாயிழந் தருந்தவன் மறைந்தான்

1. இப்பாடல் இடம்பெற்ற இலக்கியம் என்ன?
2. யாரால் பாடப்பெற்றது?
3. கதி, கட்டுரை என்பவற்றின் பொருளை தருக?
4. அருந்தவன் என்பதால் குறிப்பிடப்படுபவர் யார்?
5. இங்கு பேசப்படுகின்ற இலக்கிய வாதி யார்?

2. பின்வரும் வினாவிற்கு விடைஎழுதுக

1. உயிர்வாழ்வதற்காக இலட்சியத்தை கைவிடுதல் எத்தகைய செயலுக்கு உவமிக்கப்படுகின்றது?
2. இலட்சியத்திற்காக தம் வாழ்வை தியாகம் செய்த இலட்சியவாதிகளாக குறிப்பிடப்படுபவர்களில் நால்வரை குறிப்பிடுக
3. இலட்சியத்திற்காக இலட்சியப்பயனைத் தியாகம் செய்த இலட்சியவாதிகள் யாவர்?
4. இப்பாடப்பரப்பில் பேசப்படுகின்ற இலட்சியங்களையும் அவ்இலட்சியங்களை கடைப்பிடித்த இலட்சியவாதிகளையும் குறிப்பிடுக
5. இலட்சியமும் சமநோக்கும் என்ற பாடப்பரப்பில் இலட்சியம் பற்றி பேசப்பட்டவற்றை குறிப்பிடுக